ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1995/32 - 2016 දෙසැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2016.12.02

1995/32 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : VSW/DS/LB/Acqu /Mani/Police/1.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கிறேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஆரம்ப பட இல.: யா 2846
அமைப்பு கிராமம்: மானிப்பாய் மேற்கு L/ 140
பிரதேச செயலகப் பிரிவு: வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய்
மாவட்டம்: யாழ்ப்பாணம்
மாகாணம்: வடக்கு மாகாணம்

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: பிட்டினி வயல் அல்லது பிட்டினி; விபரம்: 3 நிரந்தரக் கட்டடங்கள், 1 தற்காலிகக் கட்டடம், 1 சீமெந்துக்கிணறு மற்றும் ஒரு மலசலகூடக் குழி; உரிமை கோருவோர்: வேலாயுதம் மாசிலாமணி மற்றும் மனைவி தவமலர்; விஸ்தீரணம்: 0.0784 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மாசி மாதம் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத்தொகை யையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017, மாசி மாதம் 16 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் விசாரணையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

திருமதி யசோதா உதயகுமார்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய்,
2016, நவெம்பர் 15.

12 - 189

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*